**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 19ம் நாள்**

**இ.ம.எண்.50/2026**
**இன்**
**அ.வ.எண்.436/2016**

1. பெரியசாமி
2. விஜயகுமார்
3. P.C.பழனிச்சாமி
4. A.கிருஷ்ணமூர்த்தி ..மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள்

/எதிர்/

1. சாமிநாதன் ..1ம் எதிர்மனுதாரர்/வாதி

2. கந்தசாமி (இறப்பு)
3. செல்வம்
4. பாலகிருஷ்ணன்
5.சுந்தரி
6. முத்துசேகர்
7. ராதிகா ..2 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1,2,3,8,9,10 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 27.01.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சுந்தரராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.V.கிரி அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>உத்தரவு</u>

கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 1A ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :

1ம் மனுதாரர் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு ஆவணங்களின் சான்று நகல்கள் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுவிட்டதால் முன்கூட்டியே மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே, கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்குண்டான காலதாமதத்திற்கு உரிய காரணங்களை மனுவில் குறிப்பிடவில்லை. மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள 24 ஆவணங்களை குறித்து எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை. மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கு தாக்கல் செய்த பின்பு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

**6. தீர்வு :**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணங்களை பற்றி மனுதாரர்கள்/4 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளதால் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணங்களை பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிடாததாலும், மனு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை மனுவில் தெரிவிக்காததாலும் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 1ம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கில் மனுதாரர்/4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், அவர்களது தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இருதரப்பிற்கும் அவர்களது தரப்பு

சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளிப்பது அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவுசெய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:55:14 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:55:19 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்